**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, NAMAKKAL**

**O.S.No.318/2023**

**01.09.2025**

**P.W.2 –** திரு. தங்கவேல்

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

வாதிகள் முருகேசன், மதன்குமார் மற்றும் மனோகரன் ஆகியோர்கள் என் உறவினர்கள். 5ம் வாதி எனக்கு பழக்கமானவர். தாவா சொத்து பிரதிவாதி மகாலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்தை கிரையம் ஒப்பந்தம்போடுவதற்கு 2 மாதத்திற்கு முன்பு போய் பார்த்தேன். அது காலி இடமாக தான் இருந்தது. அதில் ஒரு குடோன், களம் மற்றும் பாத்ரூம் லெட்டின் இருந்தது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து 0.38 செண்ட் ஆகும். நாங்கள் ரூ.74 லட்சத்திற்கு கிரையம் பேசினோம். அட்வான்ஸாக ரூ.24 லட்சம் கொடுத்தோம். கிரைய ஒப்பந்தம் ஒரே பிரதி தான் எழுதினோம். எழுதி முடித்தவுடன் ஜெராக்ஸ் எடுத்து மகாலிங்கத்திடம் கொடுத்தோம். 100 நாட்களுக்குள் கிரையத்தை முடித்து கொள்ளவேண்டும் என்று ஒப்பந்தம். ஒப்பந்தத்தில் கால கெடு 100 நாள் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. நான் 100 நாட்களுக்குள் கிரையம் முடிக்க தயாராக இருக்கிறேன் என்று தெரிவித்து பிரதிவாதிக்கு அறிவிப்பு அனுப்பவில்லை. மீதி பணம் எங்களிடம் இருந்தது என்பதை காட்டும் ஆவணம் எதையும் ஒப்படைக்கவில்லை. கிரையம் எழுதிக் கொடுக்குமாறு மகாலிங்கத்திடம் கேட்டதாக வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் 100 நாள் முடிந்தபிறகு தான் மகாலிங்கத்திற்கு நோட்டீஸ் அனுப்பினேன் என்றால் சரிதான். நோட்டீஸை 2023ல் அனுப்பினேன். கிரைய ஒப்பந்தம் 2012ல் போடப்பட்டது. நாங்கள் அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதி வழக்கறிஞர் மூலம் பதில் அனுப்பினார். அவ்வாறு பதில் அனுப்பிய விவரத்தை பிராதிலும் எனது பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த பதில் அறிவிப்பில் என்ன சொல்லப்பட்டிருந்தது என்று நியாபகம் இல்லை. அந்த பதில் அறிவிப்பில் தாவா கிரைய ஒப்பந்தம் உண்மையானது தான் என்றுசொல்லியிருக்கிறார். பிரதிவாதி தேங்காய் வியாபாரம் செய்து வருகிறார். பதில் அறிவிப்பில் தாவா சொத்தில் 60X32 அடி அளவில் ஒரு குடோன் இருந்ததாக

சொல்லியிருந்தார். அதில் தேங்காய் குடோனில் வேலை செய்யும் நபர்கள் குடியிருப்பதற்காக ஒரு வீடும் அவர்கள் பயன்பாட்டிற்காக கழிவறையும் இருந்ததாக சொல்லியிருக்கிறார். நானும் மற்ற வாதிகளும் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. தாவா சொத்தை வீட்டுமனைகளாக பிரித்து விற்பதற்காக வாங்கினோம் என்றால் சரியல்ல. வீடு கட்டுவதற்காக வாங்கினோம். பல தடவை கிரையம் எழுதி தரும்படி பிரதிவாதியிடம் கேட்டோம். குடும்ப சூழ்நிலை காரணமாக கிரையம் எழுதி தரமுடியாது என்றும், கொடுத்த அட்வான்ஸ் பணத்தை திரும்ப வாங்கி கொள்ளுமாறும் சொன்னார். என்ன குடும்ப சூழ்நிலை காரணமாக அவர் கிரையம் எழுதிக் கொடுக்க மறுத்தார் என்று தெரிந்து கொள்ளவில்லை. 100 நாட்களுக்குள் பாக்கி கிரையத் தொகையை செலுத்தி கிரையம் முடிக்கவில்லை என்றால் கிரைய தொகையை இழந்து விடவேண்டியது என்று கிரைய ஒப்பந்தத்தில் சரத்துக்கள் உள்ளது. பிரதிவாதி கிரையம் முடித்து கொடுக்க தயாராக தான் இருந்தார் என்றும், நாங்கள் தான் கிரையம் முடிக்க தயாராக இல்லை என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் போடும்போது தாவா சொத்தில் குடோன், வீடு மற்றும் கழிப்பறை இருந்தது என்றும், நாங்கள் அதை காலிமனையாக பிரித்து விற்க வேண்டும் என்பதற்காக குடோன், வீடு மற்றும் கழிப்பறையை இடித்துவிட்டோம் என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் போட்ட அன்றே சொத்தின் சுவாதீனத்தை எடுத்துக் கொண்டோம். சுவாதீனத்தை திருப்பி கொடுத்துவிட்டதாக நாங்கள் அனுப்பிய அறிவிப்பிலும், பிராதிலும், பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டு சொல்லவில்லை. நாங்கள் தாவா சொத்திலிருந்த கட்டுமானத்தை இடித்துவிட்டு கிரையம் முடிக்க மறுத்ததால் ஊர் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரியல்ல. அந்த பைசலில் தாவா சொத்திலிருந்த கட்டிடங்களை நாங்கள் இடித்துவிட்டதால் அட்வான்ஸ் தொகையில் ரூ. எட்டரை லட்சம் மட்டுமே பிரதிவாதி செலுத்த வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. அந்த பைசல் படி பிரதிவாதி எட்டரை லட்சத்தை திருப்பி கொடுத்துவிட்டார் என்றும் அதனால் தான் நாங்கள் அட்வான்ஸ் தொகையை திருப்பி கேட்டு 11 வருடங்களாக நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு போடுவதற்கு முன்பு தாவா சொத்தை போய் பார்த்தேன். அது காலியாக இருந்தது. நாங்கள் பைசல் பேசி எட்டரை லட்சத்தை திருப்பி வாங்கிய பிறகு பிரதிவாதியிடம் இருந்து அதிகமான பணத்தை பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில்

பொய்யாக இந்த வழக்கை போட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த காரணத்திற்காக தான் பதில் அறிவிப்பு அனுப்ப கால அவகாசம் கொடுக்காமல் அவசரமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.